# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழ்த்தொண்டு தொடர்பான செய்திகள்

## தேவநேயப் பாவாணர்

| | | |
|---|---|---|
| ஊர் | - | சங்கரன் கோயில் |
| பெற்றோர் | - | ஞானமுத்து, பரிபூரணம் |
| காலம் | - | 07 - 02 - 1902 முதல் 15. 01 - 1981 வரை |
| இயற்றிய நூல்கள் | - | உயர்தனிச் செம்மொழி, தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ் நாட்டு விளையாட்டுகள், தமிழர் திருமணம், வடமொழி வரலாறு, தமிழர் மதம், மண்ணிலே விண், பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும், உயர்தர கட்டுரை இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திருக்குறள் மரபுரை முதலிய 43 நூல்களை படைத்துள்ளார். |
| சிறப்பு பெயர்கள் | - | பாவலர், செந்தமிழ்செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங்காவலர், மொழி ஞாயிறு, தனித்தமிழ் ஊற்று, இலக்கியப் பெட்டகம், இலக்கணச் செம்மல், தமிழ்மானங்காத்தவர் என 174 சிறப்புப் பெயர்களை கொண்டவர். |

**சிறப்புகள்:**

- திராவிட மொழிகளுக்கு தாய்மொழி தமிழ் என்று ஆய்வு செய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர்.
- தமிழை வடமொழி வல்லாண்மையிலிருந்து மீட்க இறைவன் என்னை படைத்தான் என்று கூறியவர் - தேவநேயப் பாவாணர்.
- சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குநராக 08 - 05 - 1974 முதல் பணியாற்றியவர்- தேவநேயப் பாவாணர்.
- எனக்கு வறுமை உண்டு, மனைவி மக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு என்றவர் - தேவநேயப் பாவாணர்.
- 05 - 01 - 1981 ல் மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின் போது மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியவர் - தேவநேயப் பாவாணர்.
- 1965 ல் தமிழ் நாட்டில் மொழிச்சிக்கலும் அதனின் காரணத் தீர்வும் என்ற ஆங்கில நூலை எழுதினார்.
- 1968 உலகத் தமிழ் கழகம் என்ற தனித்தமிழ் இயக்கத்தை தொடங்கியவர் - தேவநேயப் பாவாணர்.
- மன்னிப்பு என்பது உருது சொல். பொறுத்துக் கொள்க என்பதே தமிழ் சொல் என்று கூறியவர் - தேவநேயப் பாவாணர்.

**படைப்புகள்:**

- இயற்றமிழ் இலக்கணம் (1934)
- ஒப்பியல் மொழி நூல் (1940)
- முதல் தாய் மொழி (1935)
- கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம் (1936)
- உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற்பாகம் -1950, இரண்டாம் பாகம் 1951)
- பழந்தமிழாட்சி (1952)
- திராவிடத்தாய் (1944)
- சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949)
- தமிழர் திருமணம் (1956)
- தமிழ் நாட்டு விளையாட்டுகள் (1959)
- இசைத் தமிழ் கலம்பகம் முதல் பாகம் (1966)
- The primary Classical Language of the World (1966)
- பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும் (1966)
- தமிழ் வரலாறு (1967)
- தமிழர் வரலாறு (1967)
- வடமொழி வரலாறு (1967)
- இன்னிசைக் கோவை (1969)
- தமிழ் கடன் கொண்டு தழைக்குமா (1969)
- வண்ணனை மொழி நூலின் வழுவியல் (1968)
- வேர்ச்சொல் கட்டுரைகள் (1973)
- திருக்குறள் தமிழ் மரபுரை (1969)
- தமிழர் மதம் (1972)
- மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை (1978)
- தமிழ் இலக்கிய வரலாறு (1979)

❖ **தமிழின் தொன்மையை உலகரியச் செய்தவர் - கால்டுவெல் .**

❖ **தனித்தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற் கலைஞர் .**

❖ **தமிழை தழைக்கச் செய்த செம்மல் - மறைமலையடிகள் .**

❖ **தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப் பாவாணர் .**

## பெருஞ்சித்திரனார்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | துரை மாணிக்கம் |
| ஊர் | - | சமுத்திரம் (சேலம்) |
| பெற்றோர் | - | துரைசாமி, குஞ்சம்மாள் |
| காலம் | - | 10 - 03 - 1933 முதல் 11 - 06 - 1995 வரை |
| சிறப்புப் பெயர் | - | பாவலரேறு |
| இயற்றிய நூல்கள் | - | கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம், எண்சுவை எண்பது, கற்பனை ஊற்று, உலகியல் நூறு, மகுபுகு வஞ்சி, அறு பருவத்திரு கூத்து |
| இதழ்கள் | - | தென்மொழி (தனித் தமிழ் இலக்கிய ஏடு), தமிழ்ச் சிட்டு (சிறுவர் இதழ்), தமிழ் நிலம் |

**சிறப்புகள்:**

- பாரதிதாசனின் தலைமை மாணாக்கர் - பெருஞ்சித்திரனார் ஆவார்.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை ஏற்படுத்தியவர் - பெருஞ்சித்திரனார்.
- உலக தமிழ் முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவர் - பெருஞ்சித்திரனார்.
- தமிழின் மீது தனியாத மோகம் கொண்டவர் - பெருஞ்சித்திரனார்.
- தமிழையும் காதலையும் ஒன்றாகக் கண்டவர் - பெருஞ்சித்திரனார்.

**மேற்கோள்:-**

- ஒய்வாக இருக்கையில் தம்பி - நீ, ஓவியம் வரைந்து பழகு **- பெருஞ்சித்திரனார்**

- "தமிழ் படித்தால் அறம் பெரும், அகத்தில் ஒளிபெருகும்
  திறம் பெருகும் உரம் பெருகும், தீமைக்கெதிர் நிற்கும்" **- பெருஞ்சித்திரனார்**

- அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ, அன்றாடச் செய்தி படிப்பாய் !
  **- பெருஞ்சித்திரனார்**

- **பள்ளி பறவைகளின் மூன்று பகுதிகள்:**
  குஞ்சிகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை
  பழமைவாதிகளுக்கு வருவது பிணமாலை
  துணிவுடையவருக்கு வருவது பணமாலை **- பெருஞ்சித்திரனார்**